**மனனம் செய்ய இந்த வார வசனம்:**

தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டவரன்றி வேறு எவரும் "இயேசுவே ஆண்டவர்" எனச் சொல்ல முடியாது.

**(1 கொரிந்தியர் 12;3)**

கடவுளின் வல்லமை மிக்க செயல்களைப் பற்றிய அறிவிப்பை இயேசுவைப் பின்பற்றிய சீடர்கள் மூலம் அறிந்துகொள்ள முடிந்தது. இந்தக் கொடை எவ்வாறு நமக்கு மிக முக்கியமானது? மீட்பு யூதர்களுக்கு மட்டுமல்ல; மாறாக நம்பிக்கைக் கொண்ட அனைவருக்கும் உரியது என்பதை நாம் உணரவேண்டும். இந்தக் கொடை நற்செய்தி அறிவிப்பதற்கான பரிசு, கிறிஸ்துவின் மறைத்தூதுப்பணியை இவ்வுலகில் தொடர நாம் அனைவரும் அழைக்கப்பட்டுள்ளோம். இறைவார்த்தை மனிதரின் மொழியில் அறிவிக்கப்பட்டாலும், வானதூதர்களின் மொழியில் அறிவிக்கப்பட்டாலும், அனைவரும் கேட்கவேண்டும் (1 கொரி: 13:1)

இன்றைய இரண்டாம் வாசகம் நம் அனைவரையும் கடவுளின் குழந்தைகள் என்று அறிவிக்கிறது. எவ்வளவு ஆழமான வார்த்தை இது. நாம் பாவிகள், பலவீனமானவர்கள், இருந்தபோதும், தூய ஆவியாரை நம் பெற்றுள்ளதால் கடவுளிடமிருந்து உரிமைப்பேறு பெறுபவர்கள். கிறிஸ்துவின் உடன் பங்காளிகள். **கடவுளின் ஆவியால் இயக்கப்படும் நாம் கடவுளை, "அப்பா, தந்தையே" என்று அழைக்கிறோம்.**

இயேசு தம்முடைய சீடர்களுக்கு கற்பித்ததைப் பற்றி நற்செய்தி கூறுகிறது. அவரை அன்பு செய்யும் எவரும் அவரின் கட்டளைகளைக் கடைப்பிடிப்பர். இயேசு தம் தந்தையோடும், தூய ஆவியாரோடும் கொண்டிருக்கும் ஒன்றிப்பை எடுத்துரைக்கிறார். இயேசுவோடும் தந்தையோடும் நாம் கொண்டிருக்கும் ஒன்றிப்பையும் அவர்கள் நம்மோடு குடிகொண்டுள்ளனர் என்பதையும் எடுத்துரைக்கின்றார். இயேசுவின் கட்டளைகளைக் கடைப்பிடிக்கவும், அவரின் கட்டளைகளைக் கடைப்பிடிக்கக் கற்றுக்கொடுத்து வழிநடத்தவும், இயேசு வாக்களித்த துணையாளரான தூய ஆவியாரை தந்தையாகிய கடவுள் நம்முள் அனுப்புகிறார்.

இன்று நம் திருஅவை பிறந்தநாள். அல்லேலூயா! இயேசு உயிர்த்தெழுந்த 40 ஆம் நாள் விண்ணகம் சென்றபின் பத்தாம் நாள் 50 நாள் நிறைவுபெறுகிறது. இன்றைய உலகில் திருஅவையின் மறைத்தூது தொடங்கிய நாள். இயேசு அனுப்பிய தூய ஆவியார் திருஅவையின் திருத்தூதர்களுக்குப் புதுப்பித்தலையும். அருட்பணிவாழ்வின் விழிப்புணர்வையும் ஆற்றலையும் தொடர்ந்து வழங்கிக்கொண்டே இருக்கிறார். திருஅவை உயிரோடு இருக்கிறது!

நம்முடைய வாழ்வில் தூய ஆவியாரை வரவேற்கும்போது, நாம் அவருடைய அருட்கொடைகளையும் அவரின் தனிப்பட்ட அருளையும் நம்மில் வரவேற்கிறோம். தூய ஆவியார் நம்மை வழிநடத்தி, நம்முடைய உள்ளங்களைத் திறந்து எண்ணங்களையும் புதுப்பித்திட திருப்பாடல் ஆசிரியர் இறைவேண்டல் செய்ததுப்போல, "ஆண்டவரே, உம் ஆவியை அனுப்பி, மண்ணகத்தின் முகத்தைப் புதுப்பிக்கின்றீர் என்று நாமும் மன்றாடுவோம்

**இன்றைய வாசகங்கள்:**

திப: 2: 1-11;

திபா: 104: 1, 24, 29, 31, 34;

உரோ: 8: 8-17;

யோவான்: 14: 15-16, 23-26.

INTERNAL CIRCULATION ONLY
BUL 23/2022

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

5 ஜூன் 2022

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பெந்தகோஸ்தே ஞாயிறு

மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்: ஒன்றிப்பு, பங்கெடுப்பு, மறைத்தூது



மாதாந்திர கருப்பொருள்:
**கிறிஸ்துவின் திருவுடல் திருஇரத்தப் பெருவிழா (ஜூன் 19)**

## தூய ஆவியே, எழுந்தருளி வாரும். உம்மில் நம்பிக்கை கொண்டோரின் இதயங்களை நிரப்பியருளும்

இன்றைய வாசகங்கள் அனைத்தும் விறுவிறுப்பான நிகழ்வுகளோடு அமைந்துள்ளது. திருத்தூதர்கள் மீது தூய ஆவியார் பொழியப்பட்டதால் முதன்முறையாக அவர்கள் அயல்மொழிகளில் பேசத்தொடங்கினர். திருத்தூதர்கள் பேசியதைக் கேட்ட ஒவ்வொருவரும் அவரவர் தாய்மொழியில் அதைக் கேட்டு வியந்துபோயினர்.